மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் இந்த அரசு அந்தப் பணிகளைத்தான் செய்து கொண்டிருக்கிறது.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து பல்வேறு விதமான பொருட்கள் பெறப்பட்டு பல்வேறு விதமான தொழில்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. பனை ஓலையிலிருந்து பனனத் தடி வரை அனைத்துப் பொருட்களுமே அந்தத் தொழில் மூலம் விரிவுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைக் கொண்டிருப்பதால் விரைவிலேயே பனைத் தொழில் வாரியம் ஒன்றை அமைத்து அந்தப் பனைத் தொழில் மூலமாகக் கிடைக்கின்ற பொருட்களை அடக்கமாக உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் அதில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்கள் வாழ்க்கை மேம்பாடு அடைவதற்கும் உடனடியாக அந்த வாரியம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் 1,131 ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் மாவட்ட அளவில் 5 சம்மேளனங்களும் மாநில அளவில் ஒரு பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை நிலையமும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலமாக பனை மரங்கள் ஏராளமாக இருக்கிற பல்வேறு மாவட்டங்களில் பனைப் பொருட்களை உற்பத்தி செய்கிற பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. தனியாக ஒரு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது. அதற்கான கூடுதல் செலவு 3 கோடி ரூபாய் ஆகும் என்று துறை கருதுகிற காரணத்தால் அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து இந்தத் திட்டம் எப்போது துவங்கும் என்பது நிர்ணயம் செய்யப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பட்டின் தரம்.

*3513 திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு சமுகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு பட்டு, இணையம் (டான்சில்க்)மூலம் வழங்கப்படும் பட்டு தரம் குறைவாக உள்ளது குறித்து அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1990 மே, 2]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை டான்சில்க் நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்ட பட்டு எவ்வளவு என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வியோடு இந்தக் கேள்வி தொடர்பானதாக இல்லை என்ற காரணத்தால் அதற்கான விளக்கம் தற்போது என்னிடத்தில் இல்லை. உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி எழுப்புவார்களேயானால் அதற்கான விளக்கத்தைத் தர இயலும். கைத்தறித்துறையில் இருக்கிற பட்டு நூற்பு மையங்களுக்கு கர்நாடக பட்டு நூல் இணையத்திலிருந்து தரமுள்ள பட்டு நூல் கொள்முதல் செய்கிறோம். அதே நேரத்தில் தமிழ்நாடு டான்சில்க் நிறுவனத்திடம் இருந்தும் பட்டு நூல் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தமிழ்நாடு டான்சில்க் நிறுவனத்திற்குத் தான் அதிக் முக்கியத்துவம் தரவேண்டுமென்று கருதி, டான்சில்க்கிடமிருந்து அதிகமான நூலைக் கொள்முதல் செய்து கொண்டிருக்கிறோம். மொத்தம் அதற்கு எவ்வளவு டன் தேவை என்பதற்கான விளக்கம் என்னிடம் இப்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி எழுப்பவும்.

9-40 மணி

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பட்டு இணையத்தின் மூலமாக, திருப்புவனம் பட்டு சங்கம் தேவைக்கு அதிகமாக இருப்பை வாங்கி வைத்ததன் காரணமாக ஏராளமான நஷ்டம் ஏற்பட்டதாகச் சொல்கிறார்களே, அது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா? அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய புகார் ஏதும் அரசின் கவனத்திற்கு இதுவரை வரவில்லை. அப்படி ஏதாவது தவறு நடைபெற்றிருக்குமேயானால், அதை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரேயானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS